# வாடகைக் குடியிருப்பாளர் செயலாக்க  நிதிப் பீடம் விண்ணப்ப படிவம்




பெயர்:______________________________________________

முகவரி:_____________________________________________

மின்னஞ்சல்:__________________________________________

தொலைபேசி எண்:______________________________________

1. வாடகைக் குடியிருப்பாளர் செயலாக்க நிதிப் பீடத்தின் ஓர் அங்கத்தவராக இருக்கையில் நீங்கள் மற்றைய வாடகைக் குடியிருப்பாளர்கள் சிலருடன் சேர்ந்து பணியாற்றி, வாடகைக் குடியிருப்பாளர்களால் அடையாளம் காணப்படுகின்ற முன்னிலைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் செயல்திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளுக்கான மூலவள உதவியைக் கேட்டு தனிவாடகைக் குடியிருப்பாளர்கள் அல்லது வாடகைக் குடியிருப்பாளர் குழுக்கள் செய்யும் வேண்டுகோள்களை மீளாய்வு செய்து, அங்கீகாரம் வழங்குவீர்கள். வாடகைக் குடியிருப்பாளர் செயலாக்க நிதிப்பீடத்தில் இணைந்து கொள்வதற்கு நீங்கள் ஏன் ஆர்வமாக இருக்கிறீர்கள் என்றும், இதன் வழியாக நீங்கள் சாதிக்க விரும்புவது என்ன என்றும் எங்களிடம் கூறுங்கள்.

# வாடகைக் குடியிருப்பாளர் செயலாக்க நிதிப் பீடம் விண்ணப்ப படிவம்

2. உங்கள் சொந்தச் சமூகத்தில் அல்லது அதனிலும் விரிவான ஒரு சமூகத்தில் ஒரு தன்னார்வத் தொண்டராக நீங்கள் பெற்ற அனுபவம் பற்றி எங்களிடம் கூறுங்கள். தயவு செய்து ரொறொன்ரோ சமூக வீட்டுவாரியத்தின் முன்னெடுப்புகளில் தன்னார்வத் தொண்டராகச் செயற்பட்டு நீங்கள் பெற்ற அனுபவம் ஏதும் இருந்தால் அதனையும் சேர்த்துக் கூறுங்கள்.

(உதாரணம்:ரொறொன்ரோ வீட்டு வாரியத்தின் வாடகைக் குடியிருப்பாளர் ஆலோசனைச் சபை / வெற்றிட உபயோக நிதிகள், சமூக முதலீட்டு நிதி (SIF), ரொறொன்ரோ மாநகரத்தின் அயலிடப்பகுதி மானியங்கள் மற்றும் பங்காண்மை வாய்ப்பு மரபுவழி நிதிகள், யூனைற்றட் வேய் அமைப்பின் மீளாய்வுக் குழுக்கள் போன்றவை.)

கடந்த 2018ஆம் ஆண்டு வாடகைக் குடியிருப்பாளருடன் நடாத்தப்பட்ட ஆலோசனைச் செயற்பாட்டின் பொழுது அவர்களுக்கான ஈடுபாட்டு முன்முயற்சிகளில் பல்லினப் பங்கு அளிப்பு மற்றும் பிரதிநிதித்துவத்துக்கு வழங்க வேண்டிய முக்கியத்துவம் பற்றி வலியுறுத்திக் கூறியிருந்தனர். இந்த வேண்டு கோளுக்கு இசைவாக நடக்கும் முயற்சியில் நாங்கள் விண்ணப்பப் படிவங்களில் சுயவிருப்புடன் அந்தரங்கமாக தகவல் வழங்கக்கூடிய மக்கள் சனத்தொகையியல் பகுதி ஒன்றினை சேர்ப்பதற்கு ஆரம்பித்தோம். புதுப்பித்த வாடகைக் குடியிருப்பாளர் ஈடுபாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக இது அமைந்தது. இப்பக்கத்தில் தரப்பட்டுள்ள கேள்விகளுக்குப் பதிலளித்து எல்லா விண்ணப்பதாரர்களும் தங்களை அடையாளம் காட்டும்படி ஊக்கமளிக்க விரும்புகின்றோம்.

**குறிப்பு:** இத் தகவலினை வெளியிடுவது உங்களுக்கு அசௌகரியமான ஒன்றாக இருக்கும் என்றால் “வெளியிட விரும்பவில்லை” என்ற தெரிவினை உபயோகியுங்கள். தெரிவு நடாத்தப்படும் செயல் முறையினை உங்கள் பதில்கள் பாதிக்கப் போவதில்லை.

# வாடகைக் குடியிருப்பாளர் செயலாக்க  நிதிப் பீடம் விண்ணப்ப படிவம்

**பாலினம்**

- ◯ ஆண்
- ◯ பெண்
- ◯ இருபால் முறையில் அடங்காதவர்
- ◯ என்னை நான் அடையாளம் காணும் விதம்:________
- ◯ நான் வெளியிட விரும்பவில்லை

**வயது**

- ◯ 16 முதல் 29
- ◯ 30 முதல் 58
- ◯ 59 முதல் 64
- ◯ 65+
- ◯ நான் வெளியிட விரும்பவில்லை

**LGBTQ2S+**

LGBTQ2S+ என்பது பல வகையான மாறுபட்ட பாலின அடையாளங்களை குறிப்பிடுவதற்கு உபயோகிக்கப்படும் ஒரு சுருக்கக் குறியீடு ஆகும். இதில் ஒருபால் உறவுப் பெண்களும் ஆண்களும், இருபால் உறவு மற்றும் எதிர்ப்பால் பண்பு நாட்டம், வினோதம் மற்றும் ஈராவி இயல்பு உடையவர்கள் மட்டும் அல்லாமல் இன்னும் பல வகையினரும் அடங்குவர். இந்த விளக்கத்தின் அடிப்படையில் நீங்கள் உங்களை  LGBTQ2S+ இயல்புடைய ஒருவராகக் கருதுகிறீர்களா?

- ◯ இல்லை
- ◯ நான் வெளியிட விரும்பவில்லை
- ◯ ஆம்

## வலுவீனம்

“வலுவீனம்” என்ற வார்த்தை மனிதர்களில் பலவகைப்பட்டதாக பல அளவுகளில் இருக்கும் ஒரு நிலைமையைக் குறிப்பிடுகிறது. இவற்றில் சில கண்ணுக்குத் தெரிவன ஆகவும் சில கண்ணுக்குத் தெரியாதவை ஆகவும் இருக்கும். ஒரு வலுவீனம் ஒருவர் பிறக்கும் பொழுது அமைந்திருக்கலாம், விபத்து ஒன்றினால் விளைந்து இருக்கலாம் அல்லது காலப்போக்கில் வளர்ந்த ஒன்றாகவும் இருக்கலாம். இவற்றில் உடல் ரீதியான வலுவீனங்கள், கேட்கும் திறன் அல்லது கண்பார்வையில் வலுவீனங்கள், விருத்தியில் வலுவீனங்கள், கற்பதில் வலுவீனங்கள், நீண்ட காலச் சுகவீனம் மற்றும் உளநல வலுவீனங்கள், துர்ப்பழக்கத்திற்கு அடிமையாதல் ஆகியன அடங்கும். ஒரு வலுவீனம் நிரந்தரமானதாக, தற்காலிகமானதாக அல்லது வந்து போகும் ஒன்றாக அமையலாம். இதன் காரணமாக சமூக நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்குபற்றுவதில் கஷ்டம் அல்லது தடை ஏற்படலாம். இந்த விளக்கத்தின் அடிப்படையில் நீங்கள் உங்களை வலுவீனம் கொண்ட ஒருவராகக் கருதுகிறீர்களா?

- ☐ ஆம்
- ☐ இல்லை
- ☐ நான் வெளியிட விரும்பவில்லை

# வாடகைக் குடியிருப்பாளர் செயலாக்க நிதிப் பீடம் விண்ணப்ப படிவம்

## இனப்பிரிவு /மானிடசாதி

ஓர் இனப்பிரிவு /மானிடசாதி சார்ந்த குழுவினர் அவர்களது மானிடசாதி அல்லது நிறம் என்பவற்றைக் கொண்டு மட்டுமே வகைப்படுத்தப் படுகின்றனர். இதில் அவர்களது பிறந்த நாடு, குடியுரிமை அல்லது சமய ஈடுபாடு போன்றவை கருதப்படுவது இல்லை. பின்வரும் இவற்றில் எது உங்களுடைய இனப்பிரிவு அல்லது மானிடசாதியை மிகப் பொருத்தமாக விபரிக்கிறது என்று அடையாளம் காட்டுங்கள் :

- ☐ கறுப்பர் (உ-ம்: ஆபிரிக்கர், அல்லது ஆபிரிக்க கரிபியன் அல்லது ஆபிரிக்க கனேடியன் வழிவந்தவர்)
- ☐ கிழக்கு ஆசியர் (உ-ம்: சீனர், கொரியர், ஜப்பானியர், தாய்வானியர் வழிவந்தவர்)
- ☐ லத்தினோ இனத்தவர் (உ-ம்: லத்தின் அமெரிக்கர், ஹிஸ்பானிக் வழிவந்தவர்)
- ☐ மத்திய கிழக்கு நபர் (அராபியர், பேர்சியர், மேற்கு ஆசியர் வழி வந்தவர் - உ-ம்: ஆப்கானியர், எகிப்தியர், இரானியர், லெபனியர், துருக்கியர், குருடிஷ் போன்றவர்)
- ☐ தெற்கு ஆசியர் (தெற்கு ஆசியர் வழிவந்தவர்- உ-ம்: இந்தியர், பாகிஸ்தானியர், பங்களாதேசியர், இலங்கையர், இந்தோ கரிபியன் போன்றவர்)
- ☐ தென்கிழக்கு ஆசியர் (உ-ம்: பிலிப்பினோ, வியட்னாமியர், கம்போடியர், தாய்லாந்தவர், இந்தோனேசியர் மற்றும் பிற தென்கிழக்கு ஆசியர் வழிவந்தவர்)
- ☐ வெள்ளையர் (உ-ம்: ஐரோப்பியர் வழிவந்தவர்)
- ☐ பட்டியலில் இல்லாத இனம். நான் என்னை அடையாளப்படுத்தும் இனம்: ____________________
- ☐ நான் வெளிப்படுத்த விரும்பவில்லை

## ஆதிவாசி /பூர்வீகக்குடி மக்கள்

ஆதிவாசி/பூர்வீகக்குடி மக்கள் என்போர் தம்மை முதலினத்தவர் (அந்தஸ்து பெற்றவர், பெறாதவர், ஒப்பந்தத்துக்கு உட்பட்டவர், உட்படாதவர்), மற்றும் இன்னுயிற் அல்லது மெற்றிஸ் சமூகத்தினர் என்று அடையாளம் காணுகின்றனர். இந்த விளக்கத்தின் அடிப்படையில் நீங்கள் உங்களை ஓர் ஆதிவாசி /

பூர்வீகக்குடி நபர் என்று கருதுகிறீர்களா?

- ◯ ஆம்
- ◯ இல்லை
- ◯ நான் வெளியிட விரும்பவில்லை

# வாடகைக் குடியிருப்பாளர் செயலாக்க நிதிப் பீடம் விண்ணப்ப படிவம்

## விண்ணப்பம் சமர்ப்பிக்கும் இறுதி நாள்:

விண்ணப்பங்கள் 2020 ஜனவரி 31ம் திகதி இரவு 11: 59 மணிக்கு முன்பாக எமக்குக் கிடைத்தல் வேண்டும். பூர்த்தி செய்த உங்கள் விண்ணப்பத்தை பின்வரும் இடங்களில் சமர்ப்பியுங்கள்.

- உங்கள் உட்பிரதேச சமூகசேவைகள் ஒருங்கிணைப்பாளரிடம் (CSC) சமர்ப்பியுங்கள்.
- மின்னஞ்சல் வழியாக அனுப்புங்கள்: **EngagementRefresh@torontohousing.ca**

இவ்விண்ணப்பத்தை நிரப்புவதற்கு நேரம் ஒதுக்கியமைக்காக உங்களுக்கு எமது நன்றி. உங்கள் முயற்சி வெற்றி அளிக்கட்டும்!

விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதற்கு உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் அல்லது வேறு கேள்விகள் உங்களிடம் உண்டு என்றால் தயவுசெய்து உங்கள் உட்பிரதேச தொடர்புச் சமூக சேவைகள் ஒருங்கிணைப்பாளரை (Community Services Coordinator) நாடுங்கள். உங்களுடைய சமூக சேவைகள் ஒருங்கிணைப்பாளர் யாரென்று தெரியவில்லையா? சேவை பெறுநர் பராமரிப்பு நிலையத்தினை **416-981-550**0 தொலைபேசி இலக்கத்தில் அழையுங்கள். ஒரு முகவர் பொருத்தமான நபருடன் உங்களை இணைத்து விடுவார்.

**தகவல் அந்தரங்கம் அறிவிப்பு:** இப்படிவத்தில் வேண்டப்பட்டுள்ள தனிப்பட்ட முறையிலான தகவல், வீட்டு வசதிச் சேவைகள் சட்டம் 2011 மற்றும் மாநகராட்சியின் தகவல் சுதந்திரம் மற்றும் அந்தரங்கப் பாதுகாப்புக்கான சட்டத்தின் பிரிவு 28(2) ஆகியன வழங்கும் அதிகாரத்தின் கீழ் சேகரிக்கப்படுகின்றது. இத்தகவல் பொதுவான நிருவாகத் தேவைகளுக்கு உபயோகிக்கப்படும்.

இத் தகவல் சேகரிப்பு சம்பந்தமாக உங்களிடம் கேள்வி ஏதும் உண்டென்றால், தயவு செய்து எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். மின்னஞ்சல் முகவரி: **EngagementRefresh@torontohousing.ca**

அல்லது தொலைபேசி எண்: **416-981-4435.**